பத்திரிக்கைச்செய்தி

தடையில்லா சான்றிதழ் வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற பொதுப்பணித்துறை உதவி பொறியாளருக்கு 3 வருடங்கள் கடுங்காவல் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் பிரபாகரன், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் விவசாய நிலங்கள் வைத்து பராமரித்து வந்துள்ளார். புகார்தாரர் தன்னுடைய ஒரு நிலத்தின் கிணற்றில் உள்ள போர்வெலில் மின்சார இணைப்பை பெற விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த மின் வாரியம் காவிரி ஆற்றிலிருந்து 200 மீட்டர் தூரத்தில் விவசாய நிலம் உள்ளது என்பதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்குமாறு கேட்டுள்ளனர். புகார்தாரர் தடையில்லா சான்றிதழ் கேட்டு பொதுப்பணித்துறை, நாகுடி, புதுக்கோட்டை அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.தென்னரசு, உதவிப்பொறியாளர், பொதுப்பணித்துறை, நாகுடி, புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, புதுக்கோட்டை பிரிவில் புகார் அளித்துள்ளார். மேற்படி புகார் அடிப்படையில் கடந்த 28.10.2020ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.தென்னரசு, உதவிப்பொறியாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்சபணம் ரூ.5,000/-பெற்ற போது கைது செய்யப்பட்டார். பின் வழக்கில் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 16.05.2025 திரு.தென்னரசு, உதவிப்பொறியாளருக்கு 3 வருடங்கள் கடுங்காவல் தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.5,000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.